**கூட்டு ஆதன முகாமைத்துவ அதிகாரசபை – 2015**

கூட்டு ஆதன முகாமைத்துவ அதிகாரசபையின் 2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று, உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளினதும் ஏனைய விளக்கத் தகவல்களினதும் பொழிப்புக்களை உள்ளடக்கிய 2015 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டத்தின் 13(1) ஆம் பிரிவு மற்றும் 1973 இன் 10 ஆம் இலக்க பொது வசதிகள் சபை அதிகாரச்சட்டத்தின் 21 ஆம் பிரிவு என்பவற்றுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. நிதி அதிகாரச்சட்டத்தின் 14(2)(சீ) பிரிவின் பிரகாரம் அதிகாரசபையின் ஆண்டறிக்கையுடன் சேர்த்துப் பிரசுரிக்கப்பட வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகளும் அவதானிப்புக்களும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

**1.2 நிதிக்கூற்றுக்களுக்கான முகாமைத்துவத்தின் பொறுப்பு**

இந்நிதிக்கூற்றுக்களை இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்து நியாயமாகச் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட ஒன்றிணைந்த நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

**1.3 கணக்காய்வாளரின் பொறுப்பு**

எனது கணக்காய்வின் அடிப்படையில் நிதிக்கூற்றுக்களின் மீது அபிப்பிராயம் தெரிவிப்பது எனது பொறுப்பாகும். அதியுயர் கணக்காய்வு நிறுவனங்களின் சர்வதேச நியமங்களுக்கு ஒத்ததாக (ஐஎஸ்எஸ்ஏஐ 1000-1810) இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். ஒழுக்க நெறி வேண்டுதல்களுடன் நான் இணங்கி நடப்பதனையும் நிதிக்கூற்றுக்கள் பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் அற்றவையா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதற்கு கணக்காய்வு திட்டமிட்டு மேற்கொள்ளப்படுவதனையும் இந்நியமங்கள் வேண்டுகின்றன.

நிதிக்கூற்றுக்களிலுள்ள தொகைகளினையும் வெளிப்படுத்தல்களையும் பற்றிய கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்வதற்கான செயற்பாட்டு நடைமுறைகளில் கணக்காய்வு ஈடுபடுகின்றது. மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் மதிப்பீட்டினை உள்ளடக்கும் கணக்காய்வாளரின் தீர்மானம் மீது தெரிவு செய்யப்பட்ட நடைமுறைகள் தங்கியுள்ளது. அந்த ஆபத்தினை மதிப்பீடு செய்கையில் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைக்கும் வகையில் அதிகாரசபையின் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல் மற்றும் நியாயமாகச் சமர்ப்பித்தலுக்குரிய உள்ளகக் கட்டுப்பாடுகளை கணக்காய்வாளர் கருத்தில் கொள்கின்றாரேயன்றி அதிகாரசபையின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் வினைத்திறனின் மீது அபிப்பிராயம் தெரிவிக்கும் நோக்கத்திற்காக கருத்தில்கொள்ளவில்லை. முகாமைத்துவத்தினால் பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தமான தன்மையினையும் முகாமைத்துவத்தால் மேற்கொண்ட கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மதிப்பாய்வு செய்தல் அத்துடன் நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தலினை மதிப்பாய்வு செய்தல் என்பவற்றினையும் கணக்காய்வு உள்ளடக்கியுள்ளது. 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டத்தின் 13 ஆம் பிரிவின் (3) மற்றும் (4) ஆம் உப பிரிவுகள் கணக்காய்வின் நோக்கெல்லையும் அளவையும் நிர்ணயிப்பதற்கான தற்றுணிவு அதிகாரத்தினை கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு வழங்குகின்றன.

எனது கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படையினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

**1.4 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை**

இந்த அறிக்கையின் 2.2 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

**2. நிதிக்கூற்றுக்கள்**

**2.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்**

இந்த அறிக்கையின் 2.2 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கத்தினைத் தவிர்த்து கூட்டு ஆதன முகாமைத்துவ அதிகாரசபையின் 2015 திசெம்பர் 31 இல் இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப் பாய்ச்சலினையும் இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றது என்பது எனது அபிப்பிராயமாகும்.

**2.2 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்**துரைகள்

**2.2.1 கணக்கீட்டுக் கொள்கைகள்**

அரச மானியங்கள் கணக்கு வைத்தல் தொடர்பாக பயன்படுத்தப்பட்ட கணக்கீட்டுக் கொள்கை நிதிக்கூற்றுக்களில் வெளிப்படுத்தப்பட்டிருக்கவில்லை.

**2.2.2 இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமம்**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

**(அ) இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமம் 03**

நிறுவகத்தினால் முன்னைய காலப்பகுதிகளில் இடம்பெற்றிருந்த தவறுகள் கண்டுபிடிக்கப்பட்டதன் பின்னர் வழங்கப்பட்ட முதலாவது நிதிக்கூற்றுக்கள் பின்னோக்கி சீராக்கப்பட வேண்டிய போதிலும், மீளாய்வாண்டின் போது முன்னைய ஆண்டுகளுக்குரித்தாக செய்யப்பட்ட சீராக்கங்கள் ரூபா 963,614 தொகை பின்னோக்கி சீராக்கப்படுவதற்குப் பதிலாக திரண்ட நிதியத்திற்கு சீராக்கப்பட்டிருந்தது.

**(ஆ) இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியம இலக்கம் 07**

ஒவ்வொரு ஆதனங்கள், பொறிகள் மற்றும் உபகரணங்கள் வகுப்பின் பயன்தரு ஆயுட்காலம் அல்லது பயன்படுத்தப்பட்ட பெறுமானத்தேய்வு வீதம் என்பன நிதிக்கூற்றுக்களில் வெளிப்படுத்தப்பட வேண்டிய போதிலும், ரூபா 1,632,347 கிரயமான கருவிகள் மற்றும் உபகரணங்கள் தொடர்பாக பயன்படுத்தப்பட்ட பெறுமானத்தேய்வு வீதம் நிதிக்கூற்றுக்களில் வெளிப்படுத்தப்பட்டிருக்கவில்லை.

**2.2.3 கணக்கீட்டுக் குறைபாடுகள்**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) கணிப்பீட்டு பிழை காரணமாக மீளாய்வாண்டில் அலுவலக தளபாடங்கள், உபகரணங்கள் மற்றும் இயந்திரங்கள் பெறுமானத்தேய்வு ரூபா 187,998 ஆல்

கூடுதலாகவும் கருவிகள் மற்றும் உபகரணங்கள் என்பவற்றின் பெறுமானத்தேய்வு ரூபா 91,938 ஆல் குறைவாகவும் கணக்கீடு செய்யப்பட்டிருந்தது.

(ஆ) கணிப்பிடல் பிழை காரணமாக மீளாய்வாண்டிற்குரிய பணிக்கொடைச் செலவினம் மற்றும் ஒதுக்கீடுகள் என்பன ரூபா 650,410 ஆல் குறைத்துக் கணக்கீடு செய்யப்பட்டிருந்தது.

(இ) மீளாய்வாண்டிற்குரித்தாக செலுத்த வேண்டிய வருமான வரி கணிப்பிடும் போது அதற்காக நிறுத்திவைக்கப்பட்ட ரூபா 639,910 தொகை சீராக்கம் செய்யப்பட்டிருந்த போதிலும், தொடர்ந்தும் அது பெறவேண்டிய வரியொன்றாக நிதிக்கூற்றுகளில் காண்பிக்கப்பட்டிருந்தது.

(ஈ) மீளாய்வாண்டின் போது சுனாமி வீடுகளின் உரித்தை கையளிப்பதற்காக தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகாரசபைக்கு வழங்கப்பட்டிருந்த ரூபா 1,866,395 ஆன முற்பணம் தீர்க்கப்படாதிருக்கையில் செலவினமொன்றாக நிதிக்கூற்றுக்களில் காண்பிக்கப்பட்டிருந்தது.

(உ) மீளாய்வாண்டின் திசெம்பர் 31 ஆந் திகதியில் அரசின் அடுக்கு மாடி வீட்டு திருத்த வேலைகளுக்காக அமைச்சினால் வழங்கப்பட்டிருந்த ரூபா 30,000,000 தொகையான அரச மானியம் ஆண்டின் வருமானமாக நிதிக்கூற்றுக்களில் காண்பிக்கப்பட்டிருக்கிவல்லை.

### 2.2.4 பெறவேண்டிய மற்றும் செலுத்த வேண்டிய கணக்குகள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) 05 வருடங்களுக்கு மேற்பட்ட காலமாக முன்கொண்டுவரப்பட்ட 08 கடன்பட்டோர்களிடமிருந்து கிடைக்க வேண்டிய மீதி ரூபா 5,111,256 கூட்டுத்தொகையான கடன் மீதிகள் 2006 ஆம் ஆண்டிலிருந்து அறவிடப்பட வேண்டிய ரூபா 577,464 ஆன மத்தியஸ்தக் கட்டணங்கள் மற்றும் 2009 ஆம் ஆண்டிலிருந்து பம்பியறை கூடத்தைப் பராமரிப்பதற்காக கம்பஹா வைத்தியசாலையிடமிருந்து அறவிடப்பட வேண்டிய ரூபா 577,936 தொகை மீளாய்வாண்டின் இறுதி வரையிலும் அறவிடப்பட்டிருக்கவில்லை.

(ஆ) 2011 ஆம் ஆண்டின் போது அனுமதியற்ற நிர்மாணங்களை அப்புறப்படுத்துவதற்காக தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகாரசபையால் வழங்கப்பட்டிருந்த ரூபா 350,568 ஆன முற்பணத் தொகை கணக்காய்வுத் திகதி வரையிலும் தீர்வு செய்யப்பட்டிருக்கவில்லை.

### 2.3 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்கள் என்பவற்றுடன் இணங்காமை

பின்வரும் இணங்காமைகள் அவதானிக்கப்பட்டன.

| சட்டங்கள், விதிகள், பிரமாணங்களுடனான தொடர்பு | இணங்காமை |
|---|---|
| (அ) 2003 இன் 24 ஆம் இலக்க பொது வசதிகள் சபை (திருத்தப்பட்ட) அதிகாரச் சட்டத்தின் ஐந்தாம் ஆம் பந்தியின் (ஏ) பிரிவு | கூட்டு ஆதனங்களுக்குரிய பொது வசதிகள் பராமரித்தலுக்காக உள்ளூராட்சி மன்றங்களுக்கு கையளிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டிய போதிலும், மாளிகாவத்தை மற்றும் ஜல்தர வீடமைப்புத் திட்டங்களில் பொது வசதிகளை உள்ளூராட்சி நிறுவனங்களுக்குக் கையளிப்பதற்கு மீளாய்வாண்டின் இறுதிவரையிலும் அதிகாரசபை நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. |

| | |
|---|---|
| (ஆ) இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் தாபன விதிக்கோவை | |
| VIII ஆம் அத்தியாயத்தின் 9.2 ஆம் பிரிவு | ஒரே கடமை நேரத்திற்காக விடுமுறை தினப்படி (1/30) மற்றும் மேலதிக நேரப்படி என இரண்டு படிகள் செலுத்த முடியாதிருந்த போதிலும் அதற்கு முரணாக அதிகாரசபையினால் ஒரே சேவை காலத்திற்காக 42 ஊழியர்களுக்கு இரண்டு படிகளும் ஒரே தடவையில் செலுத்தியமையால் மேலதிக நேரக் கொடுப்பனவிற்கு மேலதிகமாக விடுமுறை தினக் படிகளாக ரூபா 781,564 தொகை செலுத்தப்பட்டிருந்தது. |
| (இ) இலங்கை ஜனநாயக சோஷலிசக் குடியரசின் நிதிப் பிரமாணம் | |
| (i) நிதிப் பிரமாணம் 371(2) | முற்பணம், பதவிநிலைத் தரத்திலான உத்தியோகத்தர்களுக்கு மாத்திரம் வழங்கப்பட வேண்டிய போதிலும், அதற்கு இணங்காத வகையில் 2015 சனவரி முதல் திசெம்பர் வரை அதிகாரசபையின் சாரதிகளுக்கும் அலுவலக உதவியாளர்களுக்கும் ரூபா 469,727 தொகை முற்பணமாக செலுத்தப்பட்டிருந்தது. |
| (ii) நிதிப்பிரமாணம் 757(2) | பொருள் மெய்மையாய்வு அறிக்கையின் பிரகாரம் 265 உருப்படிகளில் பற்றாக்குறையும் 466 உருப்படிகளில் மிகையும் இருந்த போதிலும், அது தொடர்பாக நிதிப்பிரமாணத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. |
| (ஈ) பொது முயற்சிகள் சுற்றறிக்கை | |
| (I) 2015 மே 25 ஆந் திகதிய பீஈடீ1/2015 ஆம் இலக்க சுற்றறிக்கையின் 3.2.1 மற்றும் 3.2.2 ஆம் பிரிவுகள் | கடமை நடவடிக்கைகளை மேற்கொள்ளும் போது மாதாந்த எரிபொருள் படிகள் போதாமல் போகும் விசேட சந்தர்ப்பங்களில் சுற்றறிக்கை ஏற்பாடுகளின் பிரகாரம் அங்கீகாரம் பெற்றுக்கொள்ளப்பட வேண்டிய போதிலும், அதற்கு முரணாக அதிகாரசபையின் தலைவர் மற்றும் பொது முகாமையாளர் ஆகியோருக்கு ரூபா 120,764 ஆன எரிபொருள் செலவினம் மீளளிக்கப்பட்டிருந்தது. |
| (II) 2003 யூன் 02 25 ஆந் திகதிய பீஈடீ/12 ஆம் இலக்க சுற்றறிக்கையின் 8.3.8 ஆம் பிரிவு | சுற்றறிக்கையின் பிரகாரம் அமைச்சரவையின் முன்அங்கீகாரம் பெற்றுக்கொள்ளாமல் தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகாரசபையின் செவன நிதியத்திற்கு ரூபா 3,000,000 தொகை நன்கொடை அளிக்கப்பட்டிருந்தது. |
| (III) 2015 மே 25 ஆந் திகதிய பீஈடீ2/2015 ஆம் இலக்க சுற்றறிக்கையின் 04 ஆம் பிரிவு | இச்சுற்றறிக்கையின் நியதிகளின் பிரகாரம் வீட்டுத் தொலைபேசி, செல்லிடத் தொலைபேசி அல்லது இணையத்தள வசதிகள் பெற்றுக்கொள்ளும் போது செலவிடுவதற்கு நேர்கின்ற உபகரணங்கள் மற்றும் உபபாகங்கள் என்பவற்றிற்கான கிரயம் உரிய உத்தியோகத்தர்களினால் ஏற்றுக்கொள்ளப்பட |

வேண்டிய போதிலும், அதிகாரசபையின் தலைவருக்கு ரூபா 105,878 பெறுமதியான செல்லிடத் தொலைபேசியொன்றும் உப பாகங்களும் அதிகாரசபையின் செலவில் கொள்வனவு செய்யப்பட்டிருந்தன.

## 3. நிதி மீளாய்வு

### 3.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் 2015 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதிகாரசபையின் நிதி மிகை ரூபா 21,968,427 ஆக இருந்ததுடன், அதனோடொத்த முன்னைய ஆண்டின் மிகை ரூபா 10,449,154 ஆக இருந்தமையால் முன்னைய ஆண்டிற்கு ஒப்பாக மீளாய்வாண்டின் நிதி விளைவுகளில் ரூபா 11,519,273 ஆன அதிகரிப்பு அவதானிக்கப்பட்டது. மீளாய்வாண்டின் செயற்பாட்டுச் செலவினம் ரூபா 14,476,438 ஆல் குடைவடைந்தமை மேற்குறித்த அதிகரிப்பிற்கு பிரதான காரணங்களாக இருந்தன.

மீளாய்வாண்டு மற்றும் முன்னைய 04 ஆண்டுகளின் நிதி விளைவுகளை மீளாய்வு செய்த போது 2011 ஆம் ஆண்டிலிருந்து 2013 ஆம் ஆண்டு வரை நிதி பற்றாக்குறைகள் தென்பட்ட போதிலும், 2014 மற்றும் 2015 ஆம் ஆண்டுகளில் நிதி விளைவுகளில் மிகையொன்று பெறப்பட்டிருந்தது. ஊழியர் ஊதியம், அரசிற்கு செலுத்திய வரி மற்றும் நடைமுறையல்லாத சொத்துக்களுக்கான பெறுமானத்தேய்வு சீராக்கம் செய்யப்பட்டதன் பின்னர் நிறுவகத்தின் பங்களிப்பு 2011 ஆம் ஆண்டிலிருந்து 2015 ஆம் ஆண்டு வரை தொடர்ச்சியாக அதிகரித்திருந்ததுடன் 2014 ஆம் ஆண்டின் ரூபா 95,680,105 பங்களிப்புடன் ஒப்பிடும் போது மீளாய்வாண்டின் அதிகரிப்பு 6 சதவீதமாக இருந்தது.

### 3.2 பகுப்பாய்வு ரீதியான நிதி மீளாய்வு

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) கூட்டு ஆதனங்களுக்காக சான்றிதழ் வழங்கல் வருமானம் ரூபா 16,000,000 ஆல் அதாவது 17 சதவீதத்தினால் குறைவடைந்திருந்த போதிலும், முன்னைய ஆண்டிற்கு ஒப்பாக சேவைகள் கட்டண வருமானம் ரூபா 15,700,000 ஆல் அதாவது 990 சதவீதத்தினால் அதிகரித்தமை காரணமாக முன்னைய ஆண்டிற்கு ஒப்பாக மீளாய்வாண்டின் செயற்பாட்டு வருமானத்தில் கருத்திற் கொள்ளக்கூடிய வேறுபாடு ஏற்பட்டிருக்கவில்லை.

(ஆ) மீளாய்வாண்டின் இறுதியில் அதிகாரசபையின் தேறிய சொத்துக்கள் ரூபா 33,509,521 ஆக இருந்ததுடன், அதற்கு ஒப்பாக முன்னைய ஆண்டின் தேறிய சொத்துக்கள் ரூபா 12,504,708 ஆக இருந்தது. அதன் பிரகாரம் முன்னைய ஆண்டுடன் ஒப்பிடும் போது தேறிய சொத்துக்களில் ரூபா 21,004,813 ஆன அதிகரிப்பொன்று அவதானிக்கப்பட்டது.

## 4. செயற்பாட்டு மீளாய்வு

### 4.1 செயலாற்றல்

(அ) கூட்டு ஆதனங்களின் பொது வசதிகள் முகாமைத்துவம், பராமரிப்பு, கட்டுப்படுத்தல் மற்றும் நிர்வகித்தல், அவற்றை முறையாக நிறைவேற்றுதற்காக முகாமைத்துவ சபைக்கு வழிகாட்டுதல் மற்றும் அதற்காக ஒத்துழைத்தல் மற்றும் பராமரித்தலை புறக்கணிக்கும் சந்தர்ப்பங்களில் நேரடியாக பங்குபற்றுதல் என்பன 1973 இன் 10 ஆம் இலக்க பொது வசதிகள் சபை அதிகாரச்சட்டத்தின் பிரதான நோக்கங்களாக இருந்தன. அதிகாரசபையின் செயலாற்றல் தொடர்பாக

மேற்கொள்ளப்பட்ட பரிசோதனைகளில் கண்டறியப்பட்ட விடயங்கள் கீழே காட்டப்பட்டுள்ளன.

(i) அதிகாரசபையினால் கூட்டு ஆதனங்களின் முகாமைத்துவ சபைகளை செயற்பாட்டில் வைத்திருக்க வேண்டிய போதிலும், மேற்பார்வை பலவீனம் காரணமாக மீளாய்வாண்டின் இறுதியில் அதிகாரசபையால் தாபிக்கப்பட்ட 666 முகாமைத்துவ சபைகளில் 393 அதாவது 60 சதவீதம் செயலற்றுக் காணப்பட்டன.

(ii) மீளாய்வாண்டின் போது கூட்டு ஆதன சான்றிதழ் வழங்குதலின் பௌதீக மற்றும் நிதி செயல்முன்னேற்றம் முறையே 71 சதவீதம் மற்றும் 39 சதவீதமாக இருந்ததுடன், 100 கூட்டு ஆதனங்களை காப்புறுதி செய்வதற்காக முகாமைத்துவ சபைகளை ஊக்குவிப்பதற்கு திட்டமிட்டிருந்த போதிலும் மீளாய்வாண்டின் போது அதில் எவ்வித ஆதனங்களும் காப்புறுதி செய்யப்பட்டிருக்கவில்லை.

(iii) சுனாமி அனர்த்தங்களுக்கு உள்ளாகிய மக்களுக்காக நிர்மாணிக்கப்பட்ட 112 கூட்டு ஆதன வீடமைப்புத் திட்டங்களிற்காக ரூபா 10,000,000 நிதியேற்பாட்டின் அடிப்படையில் கூட்டு ஆதனங்களை பதிவுசெய்து சான்றிதழ்களை வழங்குவதற்கு இலக்கிடப்பட்டிருந்த போதிலும் மீளாய்வாண்டின் போது அதில் எந்தவொரு சான்றிதழையும் வழங்குவதற்கு அதிகாரசபை தவறியிருந்தது.

(iv) ஆலோக்கபுர, ஹில்டா மற்றும் சமுத்திரா சக்தி வீடமைப்புத் திட்ட புனரமைப்பு நடவடிக்கைகளைப் பூர்த்தி செய்வதற்காக மீளாய்வாண்டின் போது திறைசேரியிடமிருந்து ரூபா 80,000,000 நிதி ஏற்பாடு கிடைக்கப்பெற்றிருந்த போதிலும், அதற்காக ரூபா 44,576,839 மாத்திரம் செலவிடப்பட்டிருந்ததுடன், அதன் பௌதீக செயல் முன்னேற்றம் 50 சதவீதமான குறைந்த மடட்டத்தைக் கொண்டிருந்தது.

(v) செயல்நடவடிக்கைத் திட்டத்தின் பிரகாரம் பதிவுசெய்யப்படாத அரச / தனியார் ஆதனங்களை ஒழுங்குபடுத்துதல், செயற்பாட்டில் இல்லாத முகாமைத்துவ சபைகளுக்காக காப்பாளர்களை நியமித்தல், கூட்டு ஆதனங்களில் குடியிருப்போர் எதிர்நோக்கக்கூடிய அனர்த்தங்களிலிருந்து பாதுகாப்பதற்காக, வாழ்வதற்கு பொருத்தமற்ற அந்த ஆதனங்கள் தொடர்பாக அமைச்சரவையின் கவனத்திற்கு கொண்டு வருதல் என்பன மீளாய்வாண்டில் செய்யப்பட வேண்டியிருந்த போதிலும் அந்நடவடிக்கைகள் எதனையும் நிறைவேற்றுவதற்கு தவறியிருந்தது.

**4.2 முகாமைத்துவ செயற்பாடுகள்**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) உத்தரவாத காலம் கடந்த ரூபா 655,479 தொகையான பாதுகாப்பு வைப்புக்கள், ரூபா 3,238,050 தொகையான நிறுத்தி வைத்தல் பணம் (Retention) மற்றும் ரூபா 107,300 தொகையான மீளச் செலுத்த வேண்டிய கேள்வி வைப்புக்கள் என்பவற்றை தீர்த்து வைப்பதற்கோ அல்லது வருமானத்திற்கு எடுப்பதற்கோ நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

(ஆ) கணக்காய்வுப் பரிசோதனைகளின் போது சுட்டிக்காண்பிக்கப்பட்ட வீடமைப்புத் தொகுதிக் கட்டிடங்களைத் திருத்தம் செய்யும் போது, அளவிடைப் பத்திரங்களின் பிரகாரம் நிறைவேற்றப்படாத வேலை விடயங்களுக்காக 2013 ஆம் ஆண்டின் போது பிழையாகச் செலுத்தப்பட்ட ரூபா 3,839,596 தொகை மீளாய்வாண்டின் இறுதி வரையிலும் ஒப்பந்தக்காரர்களிடமிருந்து அறவிடப்பட்டிருக்கவில்லை.

(இ) 1973 இன் 10 ஆம் இலக்க பொது வசதிகள் சபை அதிகாரச்சட்டம் மற்றும் 1973 இன் 11 ஆம் இலக்க குத்தகை வீட்டு உரிமைகள் அதிகாரச் சட்டங்களில் தேவையான திருத்தங்களைச் செய்வதற்கு மீளாய்வாண்டின் போது திட்டமிடப்பட்டிருந்த போதிலும் மீளாய்வாண்டின் இறுதி வரையிலும் உரிய திருத்தங்கள் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

**4.3 பதவியணியினர் நிர்வாகம்**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) 2014 மார்ச் 07 ஆந் திகதிய 14/0014/517/001 ஆம் இலக்க அமைச்சரவைத் தீர்மானத்தின் பிரகாரம் 2013 திசெம்பர் 29 ஆந் திகதி முதல் ஒரு வருட காலத்திற்காக, ஓய்வுபெற்ற பொது முகாமையாளரின் சேவை ஒப்பந்த அடிப்படையில் மீண்டும் அதிகாரசபைக்குப் பெற்றுக்கொள்வதற்கும் அந்தக் காலப்பகுதியின் பின்னர் அப்பதவிக்காக தகுதியான பதிலீட்டாளர் ஒருவரை அவரின் மேற்பார்வையின் கீழ் பயிற்சியளிப்பதற்கும் அமைச்சின் செயலாளருக்கு அறிவிக்கப்பட்டிருந்த போதிலும், அதன் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்படாதன் காரணமாக 2016 ஏப்ரல் 30 ஆந் திகதி வரையிலும் அப்பதவி வெற்றிடமாக காணப்பட்டது.

(ஆ) அதிகாரசபையின் பிரதி பொது முகாமையாளர் (ஒழுங்கமைத்தல்) பதவி மற்றும் 07 உதவிப் பொது முகாமையாளர் பதவிகள் நீண்ட காலமாக வெற்றிடங்களாகக் காணப்பட்டன.

**5. கணக்களிப்பொறுப்புப் நல்லாளுகையும்**

**5.1 செயல்நடவடிக்கைத் திட்டம்**

2015 ஆம் ஆண்டிற்குரிய செயல்நடவடிக்கைத் திட்டத்தில் உள்ளடக்கப்பட்டிருந்த உபாய வழிகளுக்குரிய செயற்பாடுகளின் செயலாற்றலை மதிப்பிடுவதற்காக குறிகாட்டிகள் (Indicators) தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.

**5.2 பாதீட்டுக் கட்டுப்பாடு**

மீளாய்வாண்டில் பாதீடு செய்யப்பட்ட வருமானத்தையும் செலவினத்தையும் உள்ளபடியான வருமானம் மற்றும் செலவினங்களுடன் ஒப்பிடும் போது 18 சதவீதம் முதல் 127 சதவீதம் வரையான விலகல்கள் அவதானிக்கப்பட்டமையால் பாதீடானது ஆக்கபூர்வமான முகாமைத்துவக் கட்டுப்பாட்டுக் கருவியொன்றாக பயன்படுத்தப்படாதிருந்தமை அவதானிக்கப்பட்டது.

**5.3 ஆண்டறிக்கையை பாராளுமன்றத்தில் சமர்ப்பித்தல்**

அதிகாரசபையினால் 2012 மற்றும் 2013 ஆம் ஆண்டுகளுக்குரிய ஆண்டறிக்கை மீளாய்வாண்டின் இறுதி வரையிலும் பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

**6. முறைமைகளும் கட்டுப்பாடுகளும்**

கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்ட முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டுக் குறைபாடுகள் தொடர்பாக அவ்வப்போது அதிகாரசபைத் தலைவரின் கவனத்திற்குக்

கொண்டுவரப்பட்டது. பின்வரும் கட்டுப்பாட்டு பகுதிகள் தொடர்பாக விசேட கவனம் கோரப்படுகின்றது.

| முறைமைகளும் கட்டுப்பாட்டுத் துறைகளும் | அவதானிப்புக்கள் |
| --- | --- |
| (அ) வாகனக் கட்டுப்பாடு | சம்பவத்திரட்டுப் பதிவேடுகள் முறையாக பேணப்படாமை மற்றும் எரிபொருள் பரிசோதனை அறிக்கை பெற்றுக் கொள்ளப்படாமை |
| (ஆ) கூட்டுஆதன முகாமைத்துவம் | கொழும்பு நகரிற்கு வெளியேயுள்ள மாவட்டங்களில் நிர்மாணிக்கப்படும் ஆதனங்களை இனங் காண்பதற்கு முறைமையொன்று பின்பற்றப்பட்டிருக்கவில்லை. |
| (இ) நிதிக் கட்டுப்பாடு | வருடக் கணக்கில் முன்கொண்டு வரப்படும் முற்பணத் தொகையை தீர்வு செய்வதற்கு நடவடிக்கை எடுக்காமை. |
| (ஈ) பாதீட்டுக் கட்டுப்பாடு | பாதீட்டை நடைமுறைச் சாத்தியமான வகையில் தயாரிக்காமை மற்றும் செலவின கட்டுப்பாட்டிற்காக முறையான நடைமுறையொன்று பின்பற்றப்படாமை |